Library

# ★ உண்ணாவிரதத்தை ஜெயலலிதா கைவிட்டார்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 7 இதழ் 156
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 22 — 07 — 1993

(சென்னை)

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமது நான்கு நாள் உண்ணாவிரதத்தை நேற்று மாலை 5-30 மணிக்கு முடித்துக் கொண்டார்.

மாநில ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி வழங்கிய பழரசத்தை அருந்தி செல்வி ஜெயலலிதா உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். அப்போது மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. வி. சி. சுக்ளாவும் உடனிருந்தார்.

திரு. சுக்லா நேற்று முதலமைச்சரோடும், மாநில ஆளுநரோடும் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து இல

(2-ம் பக்கம் பார்க்க)

## கர்நாடக முதல்வர் ஒப்பந்தத்தை நிராகரிப்பு

(பெங்களூர்)

மத்திய அரசும் - தமிழக அரசும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை கர்நாடகா முதல்வர் வீரப்பமொய்லி நிராகரித்துள்ளார்.

முன்னதாக திரு. வீரப்பமொய்லி தமது அமைச்சரவையிலே கூடி இப்பிரச்சனை பற்றி விவாதித்தார். அந்த கூட்டத்தில்தான் இந்த நிராகரிப்பு முடிவு எடுக்கப்பட்டது.

மத்திய நீர்வள அமைச்சர் தமிழக முதல்வர் செல்வி

(4-ம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு விரைவில் கலைக்கப்படலாம்!

## 27-ம் திகதி இறுதி அறிக்கை

(கொழும்பு)

இனப் பிரச்னைக்குத் தீர்வு காண அமைக்கப்பட்ட திரு. மங்கள முனசிங்கா தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக் குழு கலைக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் எழுந்துள்ளதாக 'ஏ' எவ். பி.' செய்தி தெரிவித்துள்ளது.

நேற்றுக்கூடிய தெரிவுக்குழு எதிர்வரும் 27ம் திகதி தனது இறுதி அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளது. இதனைத் தொடர்ந்தே இக்குழு கலைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்குழுவிலிருந்து தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் ஏற்கனவே வெளியேறியிருந்தன. இந்த நிலையில் இக்குழு செயற்படுவதில் அர்த்தமே இல்லையென இக்குழுவைச்

(4ம் பக்கம் பார்க்க)

## அநுராவை சேர்க்க சிறிமா மறுப்பு

(கொழும்பு)

அனுர பண்டாரநாயக்காவை கட்சியிலிருந்து நீக்கியதை விலக்கி, மீண்டும் அவரை கட்சியில் சேர்க்குமாறு விடுத்த வேண்டுகோளை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நிராகரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியி

(4-ம் பக்கம் பார்க்க)

## அநுராவுக்கு எதிரான குற்றப் பத்திரிகை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அநுர பண்டாரநாயக்கா மேல் குற்றப் பத்திரிகை தயாரித்துள்ளதென்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தவாரமளவில் அவ

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக் குழு தோற்றால் ராணுவதீர்வுக்கு வலியுறுத்து?

(கொழும்பு)

தெரிவுக்குழு முன்வைக்கும் தீர்வு நாடாளுமன்றினால் புறக்கணிக்கப்படுமானால் இராணுவத் தீர்வே சாத்தியப்படுமென அவதானிகள் பலர் கருதுவதாக செய்திகள் கூறுகின்றன.

எனினும் தெரிவுக்குழு சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றை முன்வைக்குமா என்பதும் கேள்விக் குறியே எனவும் அந்த அவதானிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை இராணுவ ரீதியிலான நெருக்குதல் ஒன்றையும் தமிழ்பகுதியில் மேற்கொள்ளவேண்டுமென இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுவருகிறதாம்.

இதற்கிடையில் இப்பிரச்னைக்கு எவ்வித தீர்வைக் காண்பதென்றே தெரியாத நிலையில் அரசு திணறிவருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. (சி)

## வெள்ளப் பெருக்கு 1,000 பேர் பலி

(டில்லி)

இந்தியா பங்களாதேஷ், நேபாளம் போன்ற தெற்காசிய நாடுகளில் பெய்துவரும் பெருமழையினாலும், வெள்ளப்பெருக்கினாலும் இறந்தவர் தொகை ஆயிரத்தை

(4-ம் பக்கம் பார்க்க)

## கொட்டடி இளைஞர் ஜேர்மனியில் கொலை

(யாழ்ப்பாணம்)

ஜேர்மனியில் யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஜோஷ்டி மேதாவில் கத்தியால் குத்தப்பட்டு மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞர் வேலைக்குச் சென்றுவிட்டு இருப்பிடத்துக்குத் திரும்பி வரும்போது பின்புறமாக வந்து சிலர் அவரை கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளனர்.

கொட்டடியைச் சேர்ந்த சிவரத்தினம் லோகநாதன் (32-வயது) என்ற இளைஞரே மரணமானவராவார். (ம-சி)

## சில விளம்பரங்களுக்கு ரூபவாஹினி தடை

(கொழும்பு)

ரூபவாஹினி வர்த்தகவிளம்பர சேவையில் இறைச்சி, மீன் சம்பந்தமான விளம்பரங்கள் ஒலிபரப்புவதற்கு அரசினால் தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார காரணத்துக்காகத்தான் அந்த விளம்பரங்களை தடைசெய்யப்பட்டுள்ளதென்று அரசாங்க அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

போஷாக்கு குறைந்து வாழும் இலங்கை மக்களிடம் இப்படியான விளம்பரங்கள் தடைசெய்யப்பட்டது ஏன்? என்று பரவலாக மக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். (ம-சி)

## பூநகரிப் பாதை; கைதிகள் விடுதலை: வெளிநாட்டுத் தூதர்கள் அக்கறை

(கொழும்பு)

பூநகரி பாதை விவகாரம் குறித்தும், இன்னும் யுத்தக் கைதிகளின் விடுதலை குறித்தும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதர்கள் அக்கறை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் உட்பட பல நாட்டுத் தூதர்கள் அண்மையில் இதுகுறித்து கலந்துரையாடியுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இக்கலந்துரையாடலின்

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. கிராமங்களில் 500 தமிழர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மூன்று கிராமங்களை சுற்றிவளைத்த படையினர் 500க்கும் மேற்பட்ட தமிழரை கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை கன்னேமுனை, மொறக்கொட்டாஞ்சேனை, கொம்மாதுறை ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்த படையினர் 500க்கும் மேற்பட்ட ஆண்களை கைது செய்து கொம்மாதுறை இராணுவ முகாமில் தடுத்துவைத்துள்ளனர்.

இதேவேளை கடந்த 16ம் திகதி வந்தாறுமூலை பாலக்குடாவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் ஒருவரை படையினர் அடித்துக் கொலைசெய்துள்ளனர். (சி)

## அரசுக்கு எதிராக நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று விப்டன் கம்பனிக்கு அருகாமையிலும், கண் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவும் தொழிலாளர்கள் பலர் அரசாங்கத்துக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்ட பேரணியை நடாத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் அவசரகால நிலையை நீக்கு' 'தொழிலாளர்களுக்கு வெற்றி' போன்ற பல கோஷங்கள் எழுப்பப்பட்டன.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

சுத்தமான வேப்பம் விதையும், வேப்பம் பழக்கோதும் வாங்கப்படும். தொடர்பு மில்க்வைற். (எ-3265)

### ஆண்டு -4

ஆண்டு 4ற்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஏற்ப அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும் வகுப்பு ஆரம்பம் 30-07-93 மாதாந்தம் இரண்டு பயிற்சிப் பரீட்சை நடைபெறும். அடுத்த பயிற்சிப் பரீட்சை 07-08-93 சனி மு.ப. 8-00-மு. ப. 11-00 மணிக்கு நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-338)

— பெயர் மாற்றம் —

யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்

G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(இ 330)

### வேய்ச்சியம்மனே

தேரேறும் தேவியே!
பாரினில் அமைதியது
சீராக நிலவிடநீ
பேரருள் தருவாயே!

நாயன்மார்கட்டு
ப. மகேந்திரதாசன்
(இ-340)

## இராசி பலன்

22-07-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஆடி 07)

திருதியை மு. ப. 11-31 வரை, மகம் பி. ப. 2-47 வரை, அமிர்தசித்தம், இராகு காலம் பகல் 1-31 முதல் 3-01 வரை, சுபநேரம் காலை 7-31 முதல் 9-01 வரை, நாக சதுர்த்தி விரதம்.

மேஷம்: தொழில் முரண்பாடு, காரிய தாமதம், சோம்பல்.

இடபம்: உறவினர் விரோதம், பணக் கஷ்டம் மாசிப்பு வலி.

மிதுனம்; இனிய சம்பாஷணை, மனக்களிப்பு, கடித தொடர்பு.

கடகம்: கடுமையான வாதம், சகோதரர் பகை, வனப்பயம்.

சிம்மம்: பொருள் வரவு, தொழில் சிறப்பு, சுபகாரியம்,

கன்னி: பயண துன்பம், மனக்குறை, அதிகாரிகள் பாரபக்ஷம்.

துலாம்: பிரச்சனைக்கு தீர்வு, நல்லோர் நட்பு, புதிய ஸ்தானம்.

விருச்சிகம்: பிரார்த்தனை, குடும்ப சிறப்பு, இனசன வருகை.

தனுசு: மனைவியிடம் மனக்கசப்பு, தொழில் வெறுப்பு, மறதி.

மகரம்: வாக்குக் கலகம், புதிய சிக்கல், பணமூலமான அமைதி.

கும்பம்: பயண அனுகூலம், வீட்டில் கலகலப்பு, மன உறுதி.

மீனம்: காரியசித்தி, மேன்மூலமான உதவி, சுப செய்தி.

ஜோஸ்யர்

## கடன் தொகை அதிகரிப்பு

(கொழும்புத்துறை) ரூபாவிலிருந்து ஐயாயிரம் தமிழர் புனர்வாழ்வுக்கழக ரூபாவாக அதிகரித்து வழங்கி பனைப்பிரிவினர் சுயஉதவிக் வருவதாகத் தெரிவிக்கப்பட் கடன் தொகையைமூவாயிரம் டுள்ளது. (154)

உ
சிவமயம்

சாவகச்சேரி - வாரிவனேஸ்வரம்

அருள்தரு

அமிர்தபாஷினி அம்பிகா சமேத

வாரிவனநாத சுவாமி

# கும்பாபிஷேக மண்டல பூர்த்தி விழாவும்

## பிரதம சிவாச்சாரியார் பாராட்டு விழாவும்

1008 சங்காபிஷேகம்: 23-07-93 வெள்ளி பகல் 10 மணி

திருவிளக்கு பூஜை: மாலை 4 மணி (சுமங்கலிப் பெண்களும் கன்னிப் பெண்களும் கலந்து கொள்ளவும்)

பாராட்டு விழா: மாலை 5 மணி

தலைவர்: கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் (தலைவர் இந்துநாகரீகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

பாராட்டி கௌரவிக்கப்படுபவர்: பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் (புன்னாலைக்கட்டுவன்)

அறிஞர்கள் பலரின் பாராட்டுரை சிறப்புரைகள் இடம் பெறும்

இரவு விஷேட நிகழ்ச்சி மாலை 6-30 மணிக்கு

இன்னிசைக் கச்சேரி

அளவையூர் பார்வதி சிவபாதம்குழுவினர்

இரவு 8 மணிக்கு மேளக்கச்சேரி கல்வியங்காடு

முத்துலட்சுமி குழுவினர்

**அனைவரும் திருவருள் பெற வருக**

விழாக்குழுவினரும்,
ஆலய தர்மகர்த்தாவும்.

விளம்பர அன்பளிப்பு:

## சன்றயிஸ் ரேடேர்ஸ்

சாவகச்சேரி நகர்.

(இ 342)

## காரைநகர்
## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

374, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

### கிளைக்குழுத் தேர்தல் - 1993

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 01-08-93 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00 — மு. ப. 10.00 மணி வரை. அபேட்சகர்கள் நியமனங்களில் ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அன்றையதினம் மு. ப. 10.00 மணிமுதல் 11.00 மணிவரை தேர்தல் உத்தியோகத்தரால் எழுத்துமூலமான ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும். தேர்தல் திகதி: 8-8-93 ஞாயிற்றுக்கிழமை மு. ப 9.00 முதல் பி. ப. 4.00 மணிவரை நடைபெறும். பின்வரும் கிளைகளுக்கான நியமனப்பத்திரங்கள் பின்வரும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கிளை இல: | கிளையின் பெயர்: | ஏற்றுக்கொள்ளப்படும் இடம்: |
|---|---|---|
| 01 | தோப்புகாடு | சித்தன்கேணி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமை |
| 02 | சிவானை | வழுக்கம்பாறை - சுழிபுரம் |
| 05 | காரைநகர் | .. .. |
| 06 | ஆலடி | .. .. |
| 09 | வியாவில் | .. .. |
| 11 | பாலாவோடை | .. .. |
| 12 | மாரிவளவு | .. .. |
| 13 | நீலிப்பந்தனை | .. .. |
| 03 | களபூமி | பண்ணாகம் சுழிபுரம் |
| 04 | களேஷன் | .. .. |
| 08 | கோவளம் | .. .. |
| 07 | சிவகாமி | தொல்புரம் சந்தைக்கு அருகாமை |
| 10 | ஊரி | சங்கரத்தைச் சந்தி வட்டுக்கோட்டை |

திருமதி யோ. செல்வரத்தினம்
தேர்தல் உத்தியோகத்தர்

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-07-93. (எ 3264)

### உண்ணாவிரதத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிமொழிகளை வழங்கியுள்ளதாகவும் அவற்றின் அடிப்படையில் முதல்வர் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டதாகவும் மாநில நிதியமைச்சர் திரு நெடுஞ்செழியன் அறிவித்தார்.

உண்ணாவிரதம் முடிவுக்கு வந்ததாக அறிவித்ததும், அங்கு வெயிலேசய்ந்த முகங்களுடன் நின்ற மாநிலஅமைச்சர்களும், மற்றும் அ. தி. மு. க. தொண்டர்களும் யாவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

செய்தியாளர்களிடம் பேசிய செல்வி ஜெயலலிதா காவிரி நீர் நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆலோசனையை நடைமுறைப்படுத்துவது குறித்து கண்காணிக்க மத்திய அரசு ஒரு கண்காணிப்பு குழுவை அமைக்க ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். இந்தக் குழு காவிரிநீர் வரத்துபற்றிய புள்ளி விபரங்கள் மற்றும் உண்மை நிலவரங்களின் அடிப்படையில் சில பரிந்துரைகளை வழங்கும் என்றும் சொன்னார். இந்த பரிந்துரைகளை மத்திய அமைச்சரவை செயலாளர் தலைமையிலான காவிரிநீர் பெறும் மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களை உள்ளடக்கிய குழு நிறைவேற்றும் என்றும் அவர் கூறினார்.

முதல்வர் ஜெயலலிதா தமது உண்ணாவிரதப்போராட்டம் வெற்றியளித்துள்ளதாகவும், இந்த போராட்டத்திற்கு ஒத்துழைத்த சகலருக்கும் நன்றியும் கூறினார். (கே-சி)

# அறிவித்தல்

## தேசிய கல்வி நிதியம்

தேசிய கல்வி நிதியம் ஒன்றை தெ. ப. பொ. கூ. சங்கங்கள் நடைமுறைப்படுத்தி ஒழுங்கான திட்டமிட்ட கல்விப் பணிக்கு பயன்படுத்த முடிவெடுத்துள்ளன. இதனால் கல்வி தொடர்பாக தனி நிறுவனங்களுக்கு வழங்கும் நிதி நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. பொருத்தமான சகல நிதிக் கோரிக்கைகளையும் கீழ்வரும் நிறுவனங்கள் மூலம் தொடர்புகொண்டு அறியத்தரின் கோரிக்கையை கல்வி ஆலோசனைக் குழு மூலம் பரிசீலனை செய்யும்பட்சத்தில் மாத்திரம் நிதி வழங்க முடிவுசெய்யப்படும்.

1. பொது முகாமையாளர்,
   யாழ். தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
   யாழ்ப்பாணம்.
2. பொது முகாமையாளர்,
   வலிகாமம் தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
   சங்கானை.
3. பொது முகாமையாளர்,
   தென்மராட்சி தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
   வரணி.
4. பொது முகாமையாளர்,
   வடமராட்சி தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
   திக்கம்.

பொது முகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
யாழ்ப்பாணம்.

(எ- 3268)

சண்டிலிப்பாய் வடக்கு, இரட்டையப்புலம்
ஞானவைரவர் ஆலய அலங்கார

## பூங்காவனத் திருவிழா

# விஞ்ஞாபனம்

காலம்: 25-7-1993 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8 மணி

1008 சங்காபிசேகமும் அதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும்

பகல் இரவு மங்கள இசை

N. K. நடராசா குழுவினர் — சுழிபுரம்
K. R. புண்ணியமூர்த்தி .. — இணுவில்
V. K. சரவணமூர்த்தி, பஞ்சமூர்த்தி .. — கோண்டாவில்
S. S. சிதம்பரநாதன் .. — நாச்சிமார்கோவிலடி
N. R. சின்னராசா புதல்வர்கள் ரவீந்திரன், சுதாகர் குழுவினர் — இணுவில்

இரவு 10 மணி

கலைவாணர் கணபதிப்பிள்ளை சின்னமணி

**வில்லிசை**

பொருள்: வள்ளிதிருமணம்

12- 00 மணி

யாழ். சண்டுக்குழி சாம் ரமணனின்
ராஜன் இசைக்குழுவினர் வழங்கும்

## அமுத கானம்

அதனைத் தொடர்ந்து எம்பெருமான் பூந்தண்டிகையில் வீதியுலா வருவார்

ஒளி: மனோஜோதி கோப்பாய்,
ஒலி: வதனா சவுண்ஸ், அளவெட்டி
அலங்கார அமைப்பு — குணம், சண்டிலிப்பாய்.

இங்ஙனம்
பூங்காவன உபயகாரர்

அன்பளிப்பு:

## டென்சி ஸ்ரோர்ஸ்

சண்டிலிப்பாய்

(இ-344)

### மணிவாக்கு

"ஒரு கோரமான துன்பம் நிறைந்த அழிவு உன் மனதை அச்சுறுத்தும்போது, ஒரு மகத்தானசிருஷ்டியும் நிச்சயமாகவரவிருக்கிறதென அதற்கு ஆறுதல் கொள்."

— அரவிந்தர்.

# மட்டு. - பொலநறுவ எல்லைப் பகுதியில் மர்மக் கடத்தல்கள் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

பொலநறுவ - மட்டக்களப்பு பகுதி எல்லைப்புறக் கிராமங்களிலிருந்து மர்மமான முறையில் தமிழர்கள் தொடர்ந்து கடத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மர்மக் கடத்தல்களின் அதிகரிப்பினால் இப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் அச்சமும் பீதியுமடைந்துள்ளனர். கடந்த மூன்றுமாத காலப்பகுதிக்குள் 200 பேர்வரை கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டவர்களில் டாக்டர்கள், பாடசாலை அதிபர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், செல்வந்தர்கள் ஆகியோரும் அடங்கியுள்ளனர்.

வீடுகளில் வைத்தும், வேலைக்குச் செல்லும் வழியிலும் இவர்கள் கடத்திச் செல்லப்படுகிறார்கள். சீருடையிலும், சிவில் உடையிலும் வரும் படையினராலேயே இவர்கள் கடத்தப்படுவதாக கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் ஆசிரியர் பத்மநாதன், செல்வந்தரான சோதிநாதன், டாக்டர் சிவராசா, பாடசாலை அதிபர் கணபதி, அதிபர் ஆனந்தராஜா, ஆசிரியர் திருச்செல்வம், தங்கராசா ஆகியோர் இப்பகுதியிலிருந்து கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பாக படையினரிடம் சென்று குடும்பத்தவர்கள் விசாரித்தால் தாங்கள் அழைத்துச் செல்லவில்லை என்று பதில் கிடைக்கிறதாம்.

இதேவேளை கல்முனைக்குடியில் அதிகாலை 3 மணியளவில் இரு சகோதரர்கள் ஆயுததாரிகளாக வந்த குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆயுதக் குழுவில் 6 பேர் இருந்ததாகவும் இக்குழுவினர் எந்த தரப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெரியவில்லை என்றும் நவீன ரக துப்பாக்கிகளுடன், சீருடை போன்ற உடைகளில் இவர்கள் காணப்பட்டதாகவும் கடத்தப்பட்ட இளைஞர்களின் குடும்பத்தவர்கள் தெரிவித்தனர்.

நள்ளிரவு வேளைகளில் எவரும் நடமாட அஞ்சும் கல்முனைப் பகுதியில் இடம்பெற்றுள்ள இச்சம்பவம் இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. -ரி

## கடற்படை தளபதி கொலைதொடர்பாக இளம் பெண் கைது

(கொழும்பு)

கடற்படைத்தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ படுகொலை தொடர்பாக இளம் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

செல்வராணி (24 வயது) என்னும் இந்தப்பெண் நெதர்லாந்திலுள்ள தனது கணவரிடம் செல்ல கொழும்பு வந்து லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்தார். இவருக்கும் மேற்படி கொலையில் மனித குண்டான சுப்பிரமணியத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தப்பெண் மீது சட்டமா அதிபர் விரைவில் வழக்குத் தொடுக்க இருப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (வீ)

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை விநாயகர் தருமநிதியத்திடம் இருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட பாலர் பாடசாலைச்சிறுவர்களுக்கான கிலேற்றுகள் பென்சில்கள் பாஷையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலைய தலைவர் திரு. எஸ். ஜே.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் வைபவம் அண்மையில் நடைபெற்றது. -வி

## நமது நோக்கு

### இந்தச் செலவு யாருக்கு?

வடக்கு-கிழக்கு யுத்தம் மாத்திரம் இல்லாதிருந்தால் அடுத்த ஆண்டுக்குள் இலங்கை மீன் தேவையில் சுயதேவையை அடையக்கூடியதாக இருக்கும். இது கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளரின் எதிர்பார்ப்பு.

கடல் உணவுவகைகளை ஏற்றுமதிசெய்து காசு உழைக்கவேண்டிய நாடு, இன்று சுயதேவையைப் பூர்த்திக்கே திண்டாடுகின்றது!

மீன்தேவையின் பெரும் பகுதியை வட - கிழக்கு மீனவர் அளித்துவந்தனர்.

இன்று-அந்த மீனவரின் தொழில் முடக்கப்பட்டுவிட்டது.வயிற்றுப்பிழைப்புக்காக, தடைகளை மீறிச் சென்றாலோ கடற்படையினரின் அட்டகாசங்களும் துன்புறுத்தல்களும்!

ஆயுதக்கடத்தலைத் தடுக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு கடற்படையை நவீனமயப்படுத்த பல கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றன.

உதாரணத்திற்குஒன்று; 36 கோடி ரூபா செலவில் நான்கு படகுகள்வாங்கப்பட உள்ளனவாம். பிரான்ஸ் - ஜப்பான் நிறுவனங்களின் கூட்டுமுயற்சியால் இவை கட்டப்படவுள்ளன.

இப்படகுகள் விரைந்து தாக்கும் சக்திகொண்டவையாம். விரைந்த தாக்குதலால் பாதிக்கப்படப் போகிறவர்கள் அப்பாவி மீனவர்கள் தான்!

எமது பகுதி கடல் வளப்பெருவாழ்வை நசுக்கிவிட்டால், நலிந்துவிட்ட சமுதாயம் அடங்கிப்போய்விடும்; அடிப்படை மனித உரிமைகளையே மறந்து போய்விடும் என்ற தப்புக்கணக்குப் போடுகிறார்கள்!

அதேவேளை - மீன் உணவில் சுயதேவையைப் பூர்த்திசெய்ய திட்டம் போடுகிறார்கள். 95கோடி ரூபா செலவில் 500 மீன்பிடி வள்ளங்கள் விநியோகிக்கப்பட உள்ளன. 50சதவீத மானிய விலையில் இவை விநியோகிக்கப்படும்.

இதைவிட, இழுவைப் படகுகளின் எண்ணிக்கை 500 லிருந்து 1500 ஆக அதிகரிக்கத்திட்டம்!

இவை யாருக்கு? எப்பகுதி மீனவருக்கு?

பொதுப்பணச்செலவில் இரண்டுவகை கடலிலே கால்வைக்காதே என்று மீனவரை மிரட்டவும் விரைவுப் படகுக் கொள்வனவு,

அதேவேளை, மானியத்தில் வள்ளங்கள் தந்து, "தாராளமாகச் சென்று ஏராளமாக மீன்பிடித்து வருக!" என்று ஆசிகூறி அனுப்புகிறார்கள் இன்னோர் பகுதியினரை!

இதற்குத்தான் ஒற்றையாட்சியா?

# பிக்குகளின் எதிர்ப்பினால் — அங்கிலிக்கன் ஆயரின் யாழ். விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவின் யாழ். விஜயம் பௌத்த பிக்குகளின் எதிர்ப்பினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கெனவே யாழ். வந்து சென்ற பின்னர் கொழும்பில் ஆயர் கென்னத் பெர்னாண்டோவுக்கு பலத்த கண்டனமும் எதிர்ப்பும் சிங்கள இனவாத அரசியல்வாதிகள் மத்தியில் ஏற்பட்டது.

பௌத்தமத தலைவர்கள் உட்பட பல சமயத் தலைவர்களுடன் மீண்டும் யாழ் வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு ஆயர் கென்னத் பெர்னாண்டோ நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

மீண்டும் ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வரும் முயற்சிகளுக்கு பௌத்த பிக்குகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகளின் உறவினர்கள் கொழும்பில் ஆயர் கென்னத் பெர்னாண்டோவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். (ரி)

## இராணுவம் தொல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்முனைப் பகுதி மீனவர்களால் பிடிக்கப்பட்ட மீன்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்படுவதாக இப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட மீன்களுக்கு படையினர்பணம் எதுவும் செலுத்துவதில்லையென்றும் புகார் தெரிவித்துள்ளனர். -க-கி

## சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள்

(மானிப்பாய்)

அரச திணைக்களங்களில் 1-2-92ம் ஆண்டிற்கு முன்னர் இலை தற்காலிக பதில் பணியாளர்களாகக் கடமையாற்றிய சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதுசம்பந்தமாக சுற்றறிக்கை இவ் அமைச்சினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றிற்கும் அனுப்பிவைத்துள்ளது. இல. 14/93 கொண்ட சுற்றறிக்கையில் மேற்படி பதவியில் தொடர்ச்சியாகப் பணிபுரியும் அனைவரையும் 1-5-93 முதல் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## இன்று

(அரியாலை)

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையில் நடைபெறும் கூட்டுத் திருப்பலி திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் நிறைவுபெறும். (59)

## புனித - ஆனாள் திருவிழா

(அரியாலை)

யாழ். பாண்டியன்தாழ்வு புனித ஆனாள் (அன்னம்மாள்) திருவிழா கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இத்திருவிழா எதிர்வரும் 26ந் திகதி திங்கட்கிழமை நடைபெறும் திருநாள் கூட்டுத்திருப்பலி திருச்சொரூப பவனியுடன் நிறைவு பெறுகிறது. -59

## வடக்கில் பணியாற்ற பல அமைப்புகள் ஆர்வம்

(கொழும்பு)

கொழும்பில் இயங்கிக் கொண்டிருக்கும் புதிய சர்வதேச அமைப்புகள் யாழ்ப்பாணத்தில் பணியாற்ற ஆர்வம் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டு வரும் "கெல்வற்றஸ்" அமைப்பு உலகதரிசன நிறுவனம் போன்றவை உட்பட பல அமைப்புகள் யாழ்ப்பாணத்தில் பணியாற்ற ஆர்வம் கொண்டுள்ளன.

இத்தகவலை அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப்பிரதிநிதிகள் தெரிவித்தனர். (வி)

## 168ஆக தேர்தல் தொகுதிகளை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் தொகுதிகளை 168 ஆகக்குறைக்கவும் அகில இலங்கை ரீதியில் 57 நியமன எம். பிக்களுக்கு இடமளிக்கவும் ஏற்ற வகையில் நாடாளுமன்ற தேர்தல் முறையை மாற்றியமைக்கும் ஒரு யோசனை பரிசீலனையில் இருப்பதாகத் தெரிய வருகிறது.

தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான தெரிவுக் குழுஒன்று நியமிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் குறித்த யோசனை பரிசீலனைக்கு வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 196 பேர் கட்சி ரீதியிலும் 29 பேர் தேசிய பட்டியலில் இருந்தும் தெரிவாகியுள்ளனர். (வி)

# பொலிஸ் உயர்மட்டங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படும்

(கொழும்பு)

இவ்வார இறுதிக்குள் பொலிஸ் உயர் மட்டங்களில் பாரிய மாற்றங்கள் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாரத்தில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட 12 பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா இருவார லீவின் பின்னர் மீண்டும் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். பொலிஸ் மா அதிபர் லீவில் நின்ற காலத்தில் பதில் பொலிஸ் மா அதிபர் பிராங் சில்வா கடமையாற்றி வந்தார்.

பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் நவம்பர் வரை கடமையாற்றுவார் எனவும் அதற்கு முன்னர் அவர் பதவி விலகமாட்டார் எனவும் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வி)

## இலவச வைத்தியசேவை

(அரியாலை)

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சமாசத்தால் நடாத்தப்படும் இலவச வைத்திய சேவை திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று வருவதாக தெரியவருகின்றது.

(59)

# ஜே. வி. பி. செயற்பாட்டுக்கு 'றோ' உதவி புரிந்துள்ளது!

## 'சண்டே ஒப்சேவர்' தகவல்

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதியில் ஜே. வி. பி. தீவிரமாகச் செயற்பட்ட காலத்தில் அதன் முழுச் செயற்பாட்டுக்கும் இந்திய புலனாய்வுத்துறையான 'றோ' உதவி புரிந்து வந்ததாக 'சண்டே ஒப்சவர்' பத்திரிகையில் அதன் பத்தி எழுத்தாளர் அனுருத்ரா திலகசிறி எழுதியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்: அக்காலப் பகுதியில் தமிழகத்தில் மறைவிடமொன்றில் ஜே. வி. பி யைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோருக்கு 'றோ' ஆயுதப்பயிற்சியை வழங்கியுள்ளது.

ஜே. வி. பி. யின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க இலங்கையிலிருந்து தமிழகம் தப்பிச் செல்லவும் அங்கு பாதுகாப்பான இடத்தில் தங்குவதற்கும் 'றோ' ஏற்பாடு செய்திருந்தது. மேலும் சோமவன்ச அமரசிங்கவின் பிள்ளைகள் தமிழகத்தில் கல்வி பயிலவும் 'றோ' ஏற்பாடு செய்திருந்தது.

இந்தியப்படை இலங்கையில் இருப்பதாகக் கூறித் தெற்கில் ஜே. வி. பி போராடியபோதும் அதன் நோக்கம் இலங்கை அரசுக்கு எதிரான புரட்சியே எனவும் தெரிவித்துள்ளார். (சி)

# க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை விடைத்தாள்கள் விமான மூலம் வருகிறது

(திருநெல்வேலி)

க. பொ. த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை எடுத்துக்கொண்டு யாழ். கல்விப் பணிப்பாளர் அடுத்த வாரம் விமானம் மூலம் வந்தடைய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2-8-93 முதல் ஆரம்பமாகவுள்ள இந்த உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (157-சி)

# 'றுகுணு' வந்தது 'குமாரி' சென்றது

(நெல்லியடி)

கொழும்பிலிருந்து புறப்பட்ட 'றுகுணு' கப்பல் 2,121 பரல் மண்ணெண்ணெயுடன் நேற்றுக்காலை 8-30 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது. எண்ணெய் பரல்கள் இறக்கும் பணிகள் உடன் ஆரம்பமானது.

இதேவேளை பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்கிய 'குமாரி' கப்பல் நேற்றுமாலை கொழும்புக்குப் புறப்பட்டது.

இதேவேளை நேற்றுமாலை காங்கேசன்துறைத் துறைமுகத்தை வந்தடைந்த குமணக் கப்பல் இன்று காலை பருத்தித்துறையை வந்தடைய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (160-157-சி)

# எவுகணை குறைப்பு உடன்பாடு

## அமெரிக்கா - ரஷ்யா முரண்பாடு

(மொஸ்கோ)

இந்தியாவுக்கு ரஷ்யா விற்பனை செய்வதாக ஒப்புக்கொண்ட ராக்கட் தொழில் நுட்பத்தை ரஷ்யா இந்தியாவுக்கு விற்பனை செய்யாது என அறிவித்திருப்பது, ரஷ்யாவின் தேசிய அவமானமாகும் என, ரஷ்ய நாடாளுமன்ற தலைவர் திரு கஸ்புலரோவ் கருத்து கூறியுள்ளார்.

தானும், பிரதமர் ஜெல்ஸினும் இந்தியா சென்றிருந்தபோது இந்தியாவுக்கு ரொக்கட் தொழில் நுட்பம் வழங்குவதாக உறுதியளித்திருந்தோம் தற்போது ஜெல்ஸினின் ஏன் இப்படி உறுதிமொழியிலிருந்து பின்வாங்குகிறார் என கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்காவின் வேண்டுதலே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டது.

ஜெல்ஸின் கொள்கைகளை கடுமையாக விமர்சிக்கும் பெரும்பான்மை ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்காவுக்கு பதிலடிதரும் நடவடிக்கையாக அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான எவுகணை குறைப்பு ஒப்பந்தங்களை அங்கீகரிக்க மறுக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக ரஷ்ய செய்தியொன்று கூறுகிறது. (கே-சி)

# தேசியக் கல்வி நிதியம் அமுலுக்கு வருகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்விக் கழகத்துடனும் கல்வித் திணைக்களத்துடனும் இணைந்து தேசியக் கல்வி நிதியம் ஒன்றை நடைமுறைப்படுத்த வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க சமாசம் முன்வந்துள்ளது.

கடந்த 14ம் திகதி கூ. அ. உ. ஆணையாளர் (ப. பொ.) தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இத்திட்டத்தை 1-8-93 முதல் அமுல்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது,

மேலும் பொதுக் கல்வித் தேவைக்கான கோரிக்கைகளை மேற்படி சங்கங்களின் சமாசத்தில் பெறலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# 5,000 கோடி ரூபா நாட்டில் கறுப்புப் பணம்

(கொழும்பு)

"நாட்டில் 5 ஆயிரம் கோடி ரூபா கறுப்புப்பணம் இருப்பதாக கூறி நிதி அமைச்சர். அதனை கொணர்வதற்காக ஒரு சட்ட மூலத்தைகொண்டு வந்த போதும் அவரால் ஒரு ஆயிரம் கோடி ரூபா கறுப்புப்பணத்தையாவது வெளிக்கொணர முடியவில்லை.

இவ்வாறு நேற்று, நாடாளுமன்றத்தில் வெளிநாட்டில் இலங்கையர் வைத்திருக்கும் பணத்தை இலங்கைக்கு கொண்டுவர வரிச்சலுகை வழங்கும் சட்ட மூல விவாதத்தில் கலந்து கொண்டு திரு. அதாவுட செனவிரட்ன கூறினார் நிதி அமைச்சர் எதிர்பார்ப்பதுபோல் வெளிநாட்டுப் பணம் இங்கு கொண்டுவரப்படமாட்டாதெனவும் அவர் கூறினார். (கே-சி)

# நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வைத்திய சிகிச்சைக்காகக் கொழும்பு செல்வதற்கு வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களையும், அவர்களுடன் கூடச் செல்பவர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சிபார்சுக் கடிதம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் தமது காரியாலயத்தில் சமுகமளிக்கும்படி யாழ் பொது வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுக் கொள்கிறார். (சி)

# இலங்கை - இந்திய கிரிக்கெட் போட்டி கைவிடப்படும் நிலையில்

(கொழும்பு)

இலங்கை - இந்தியாவுக்கு மிடையில் கண்டியில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்போட்டி கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

கண்டியில் பெய்த கடும் மழையினால் கிரிக்கெட் போட்டி ஆரம்பமான அஸ்கிரிய மைதானத்தில் மழைநீர் சரியாக வற்றுவதிலும் காலநிலை மிக மந்தமாக இருப்பதினாலும் நேற்றைய 4-ம் நாள் ஆட்டமும் கைவிடப்பட்டது. இன்று போட்டியின் கடைசி நாள்.

ஐந்து நாள் ஆட்டத்தில் இதுவரை 50 நிமிடங்கள் மட்டுமே ஆட்டம் நடைபெற்றுள்ளது இதில் இலங்கை 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 24 ஓட்டங்களைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (வி-சி)

# கைது செய்யப்படுபவர்கள் லஞ்சம் பெற்று விடுவிப்பு

(கொழும்பு)

கடந்த மூன்று வார காலப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் விடுதலை செய்யப்படுபவர்கள் லஞ்சம் கொடுத்தே விடுவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக கொழும்பில் வதிபவர்களும், தொழில் பார்ப்பவர்களுமே இவ்வாறு கைதாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடந்தவாரம் கொழும்பு, கண்டி, குருநாகல் ஆகிய பகுதிகளிலும் 43 இற்கும் கூடுதலான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (சி)

## கர்நாடக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயலலிதாவுக்கு வழங்கிய உறுதிமொழியை அடுத்து செல்வி ஜெயலலிதா தமது உண்ணா விரதத்தை முடித்திருந்தவேளை கர்நாடக முதல்வர் உடனடியாக இந்த நிராகரிப்பை அறிவித்திருப்பது மத்திய அரசுக்கு ஒரு சங்கடநிலையை ஏற்படுத்தியுள்ளது. (கே-சி)

## அரசுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பல எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் சமுகமளித்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி நவசமசமாசக் கட்சி தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார கருத்துத் தெரிவிக்கையில்: அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவதாக இருந்த சம்பள உயர்வை பின்போட்டமை, தொழிலாளர்களுக்கு விரோதமாக புகையிரதப் பகுதி அதிகாரிகள் தெரிவித்த கருத்துக்கள், பூலை கொடுப்பனவு கொடுக்காமை ஆகியவற்றுக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்துவதாகக் கூறியுள்ளார். (ம - சி)

## பூநகரிப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது இலங்கை அரசு அதிகாரிகளும் அழைக்கப்பட்டு மேற்படி இரு விவகாரங்களினதும் முன்னேற்றம் குறித்தும் விபரம் கோரப்பட்டதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கைதிகள் விடுதலை குறித்து பிரிகேடியர் விரசேகரா மீண்டும் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் கூறுகின்றன. (சி)

## நாடாளுமன்றத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்ந்த சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

இவ்வேளை வடக்கு கிழக்கு மாகாண இணைப்புக்குச் சிங்களக் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததும், பிரதான கட்சிகளான ஐ. தே. க. வும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தங்கள் யோசனையைத் தெரிவித்திருந்ததையும் தெரிவுக் குழுவின் செயற்பாட்டைப் பெருமளவில் முடக்கியிருந்தமை குறிப்பிடத்தது. (கே-சி)

## வெள்ளப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாண்டிவிட்டது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் பஞ்சாப், ஹரியானா, இமாலயப் பிரதேசம் ஆகிய பகுதிகளே வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாகும். (ம-சி)

## அநுராவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு குற்றப்பத்திரிகை கையளிக்கப்படும். இதன் பின் கமிட்டி ஒன்று நியமித்து குற்றங்களை ஆராய இருக்கின்றது. கமிட்டியின் அறிக்கை மத்திய குழுவின் பரிசீலனைக்கு சமர்பித்து அதன் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-சி)

## அநுராவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள அனுதாபிகள் சிலரும், அரசியல்வாதிகள் சிலரும் திருமதி ஸ்ரீமாவோவைநேற்று முன்தினம் சந்தித்து மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தனர்.

இதற்கு அநுரா பண்டாரநாயக்கா மேல் உள்ள குற்றங்களை விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படுமென்று திருமதி பதிலளித்துள்ளாராம். (ம-சி)

# அமைச்சர்கள் செல்லும் வாகனங்களுக்கு கொழும்பில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில் அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் செல்லும் வாகனங்கள் பலத்த பாதுகாப்புடன் வெகு வேகமாக செல்கின்றன என்று கொழும்பிலுள்ள பி. பி. சி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் செல்லும் வாகனங்களுக்கு தொடர்வாகனங்கள் மூலம் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு வருகிறது.

வெடிகுண்டுப் பீதியுடனேதான் இவ் வாகனங்கள் செல்வதோடு, இந்த அரசியல் தலைவர்கள் செல்லும்போது முக்கிய சந்திகள் எல்லாம் பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதோடு சோதனைகளும் அடிக்கடி இடம்பெறுகின்றன. (கே)

# தேர்தலை ஒத்திவைக்க தி. மு. க. கோரிக்கை

(சென்னை)

அடுத்தமாதம் 19ம்திகதிபழனி நாடாளுமன்ற தொகுதியிலும் ராணிப்பேட்டை சட்டசபை தொகுதியிலும் நடைபெறவுள்ள இடைத் தேர்தலை ஒத்திவைக்குமாறு தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இத்தொகுதிகளில் வரட்சி நிலவுவதால் தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லையென்றும் வரட்சி நிலவும் போது தேர்தல் ஒத்தி வைப்பது வழமை என்றும் தேர்தல் ஆணையாளர்களுக்கு இக்கட்சி கடிதமூலம் உணர்த்தியுள்ளது. (கே - சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B